உ

கடவுள் துணை.

சுப்ரமண்யர்மாலை.

சென்னை:—ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

1922.

உ

ஸ்ரீ தண்டபாணி துணை.

சுப்ரமண்யர்மாலை.

காப்பு.

சீர்பெருகுந்தென்பழனி யாண்டவர்மேற்
சுப்ரமணயர் மாலைசெப்பக்
கார்பெருகுங் கரிமுகவேள்கணபதியை
அனுதினமுங் கருத்திலுன்னி
பார்பெருகும்பழனி மலைக்கதிபதிமேல்ப்
பைந்தமிழால் மாலைபாட
ஆர்பெருகு யானைமுகத்தைங்கரனை
அனுதினமுமருள் செய்வாயே.

துதி.

சரவணபவனே ஆறிருபுயனே
சயரொளி பவனெனவருவாய்
அானிடபுதல்வா மரகதவடிவேல்
ஐங்கரழகிளைய வேல்முருகா
மரகதவடிவேல் கரத்தினிலெடுத்து
மயிலினிலேறியே வருவாய்.

அரகாரமுருகா அருமுகாசரணம்
ஐயனே சுப்ரமண்யனே. 1

நோக்கந்திர.

சிரத்தினிமுடியுர் திருமுத்தழகுஞ்
சிறுவிழியாணிக்கற் றொளிவுஞ்
சிரசினில்சடையும் மருகுனேமூக்குஞ்
செங்கனி வாய்பசும்பொன்
மரகதமிழைத்த கழுத்திருபுயமும்
மதிவட்டம்போல் வயரிடையும்
மிருதுடைபசும்பொன் பாதமேசரணம்
சுன்வரா சுப்ரமண்யனே. 2

வசனிப்பு.

கூத்தனேயுதைத்த அரனிடபுதல்வா
குமரனே பழனியில்வாழும்
நாற்றிசையுனது மலேயிடவொளிவும்
நயனமுந் தோப்புடனழகும்
நெற்றியும்பனுதி கோபுரத்தழகும்
நிசமதிலக் கொங்கையினழகும்
பார்த்திடத்தினமும் பரிமளவாசம்
பழனியில் சுப்ரமண்யனே. 3

தோத்திரம்

அனுதினமுன்னையே நம்பினேனுன்னை
அருள்புரிந் தாதரியப்பா
மணிமதியாவு மாலையாயனிவாய்
பாடவுநாவினு லெழுதாய்
துணிகரமாகத் தமிழுறைகூறத்
துணையென உதிக்கும்வடிவேல்
மணியசைந்தாட மயிலினிலேறி
வந்திடுஞ் சுப்ரமண்யனே. 5

வள்ளியைச் சேர்ந்தவிடம்.

குறமகளான வள்ளியைச்சேர்ந்த
குமரனே அருமுகக்கந்தா
குருவெனநீயும் அனுதினவாமுங்
கொடுத்திடும்பசுவ பாக்கியங்கள்
கரத்தினில்வடிவே லெடுத்திடுந்துரையே
கடாட்சமும் வைத்தெனக்கருள்வாய்
அரகராமுருகா சரவணபவனே
அருள்தருஞ் சுப்ரமண்யனே. 5

பாக்கியந் தந்தவிடம்.

மவுனமாநீயு மிதந்திடவேண்டா
மனசுவைத் தென்னையாளுவாய்

பசுவு பாக்கியமும் அதிகமாய்கொடுக்கப்
பசுமயிலேறியே வருவாய்
சவுரியந்துணிவு அரிவுநல்வசியம்
சகலமுங் கேட்டதுதருவாய்
தவசிருந்தென்னை அனுதினமனதில்
தயவுவை சுப்ரமண்யனே. 6

சொற்பனத்தொழுவு.

நித்தியமெனது சொற்பனந்தனிலும்
நேரிடும்பாவனங்கள்நீக்கி
சத்தியமாக நித்தியநினைக்கச்
சரவணபவனெனவ்ருவாய்
புத்தியும்பசுவும் புத்திரபாக்யமும்
புண்ணியவிபூதிநீ தருவாய்
குற்றமேகோடிச் செய்திடப்பொருப்பாய்
குமரனே சுப்ரமண்யனே. 7

பேய்விலக்கல்.

அனுதினமென்னையே அதட்டியேபேய்வந்
தணுகிடும் வேளையில்கந்தா
நணுகியேகுறல்விட் டழுதுநான்பழனி
நாயகாசண்முகா யென்பேன்
துணிகரத்துடனே வேல்முக்கிலையாய்
துணித்திடக்குறல் விடவருவாய்

புனிதமுள்ளவனே ஆறிருபுயனே
புண்ணியா சுப்ரமண்யனே. 8

பசிசோம்பல்.

மிகுந்திடும்பசியில் மயக்கமுஞ்சோபம்
மெலிந்துநானிருக்கையில் குமரா
தமதிமியெனவே தாசிகளாடத்
தவில்முற சதிரவேவந்து
நிகழ்வில்லாமர்ப் பால்பழந்தேனும்
நிறந்தனத்தாசிகளாட
அகமகிழ்ந்தெனக்கு சுகிர்தமுங்கொடுப்பாய்
அய்யனே சுப்ரமண்யனே. 9

தூதரை விலக்கல்.

கிட்டியேதூதர்க் கட்டியேகயராய்க்
குலைசெய்ய உயிர்பிடித்திழுத்தால்
மட்டில்லாத்துயரம் விட்டழுதன்னை
மனத்தினில் நினைத்திடத்தந்தாய்
செட்டியாயுனது சடாச்சரஞ்சேவித்துக்
கெலித்திடவேல் விட்டுத்துறத்திக்
சுட்டியேதிருனூர் கெற்றியிலிடுவாய்க்
கர்த்தனே சுப்ரமண்யனே. 10

சத்துருசங்கார வேல்தனையெடுத்துச்
சுவாமிவந்தெதிரேநின்று
சத்துவங்கெடவே சேய்முனிராட்சதை
சடைவிரித் தாடியேபுலம்ப
பத்திடத்திரைதை செந்தணல்மூடிப்
பருமுனை வேலினாலிடித்துப்
புத்தியைக்கொடுத்துப் பேய்விலக்கும்
புண்ணியா சுப்ரமண்யனே. 11

பில்லிசூனியம் விலக்கல்.

சல்லியநூல்கள் றறித்திடும்பேர்கள்
சதிருடன்கரு வெடுத்தென்பேர்
சொல்லியேவுனறு கருவதைத்தடவிச்
சூட்டியேவுருவச் செய்யும்வேழை
பில்லிசூனியமும் பெரும்பகையாவும்
பேர்சொல்ல ஓடச்செய்யும்
வல்லமையுள்ள மயிலினிலேறி
வந்திடுஞ் சுப்ரமண்யனே. 12

ஆற்றை விலக்கல்.

ஆற்றினிலிறங்கி அக்கரைசேருமுன்
அல்திகநீர் பெருகியேவந்தா

போற்றியேமனதில் நினைந்திட முருகா
புண்ணியாநிமிஷத்தில் வந்து
சேர்த்தியேவாரி யெடுத்திருகையால்
க்ஷணத்தினி லக்கரைவிடுவாய்
பூத்திடுமுருகா புண்ணியமுருகா
சுந்தரசுப்ரமண்யனே. 13

ஆனையைவிலக்கல்.

மதமொழிந்தானை வந்தெனைவளைந்து
மதத்தினால் மிதித்திடவருமுன்
பதம்பெறவுனையே நினைந்திடவருமுன்
பெருமயி லேறியேவருவாய்
நிதம்பெறயானை வணங்கிடவசியம்
நீரிடும் நெத்தியில்தினமும்
வதனமுள்ளவனே ஆறிருபுயனே
வசிகரா சுப்ரமண்யனே. 14

வரந்தந்தவிடம்.

மரகதவடிவாய் யொயிலிசைநடையாய்
மயிலினி லேறியேவருவாய்
தாரகதமான ரதத்தினிலேறித்
தருசினில் வரந்தரவருவாய்
சரவணபவலன சகலமுந்தருவாய்
சடுதியிலனுதினம் வருவாய்
ஆரகாமுருகா அமரர்கள் துணைவா
அய்யனே சுப்ரமண்யனே. 15

வேங்கையைவிலக்கல்.

வினபுலிவேங்கை சினந்துகையோங்கி
வாய்திறக்தெனது மேல்யெதிர்ததால்
நினேத்துன்னேமனதில் நினேந்திடமுருகா
குமரனே அரகராவருவாய்
சரிந்திடக்குடல்கள் முறிந்திடவேங்கை
ஷண்முகவேலினுலிடிதது
பரிந்தென்னேதினமும் பார்த்திருகண்ணுல்
பழனியில்சுப்ரமண்யனே. 16

கள்ளரைவிலங்கல்.

ஆர்பரித்தெழுந்து நடத்தினில்கள்ள
ரடிதஎதன்னேப் படித்திட நினேத்தால்
அருமுகத்தோடே ஆர்ப்பரிதஎழுந்து
அசுரரைவதைத்த வேல்முருகா
நீர்க்கமாய்திருடர் திசைகள்கெட்டலைய
திக்குவேறறவேதாத்தி
காப்பதுன்செயலே அடியேனேத்தினமும்
காத்தனேசுப்ரமண்யனே. 17

தற்சரூபமானவிடம்.

அற்புதமாகயெப்போதுவருவாய்
அசுரரைவத்த வேல்மிருகா
கற்பூசச்யர்வருவாய் மெய்ப்பொருள்தருவாய்
கர்த்தனே மயிலினில்வருவாய்

சொற்பனத்தருள்வாய் யெப்போதுந்துணையாய்
  சோதிசுடரொளிவிளக்கே
தயாபாரயென்னையே நித்தமுங்காப்பாய்
  தயாபராசுப்ரமண்யனே. 18

கார்மழைவிலக்கல்.

காட்டினில்தனியேசெல்கின்றநேரம்
  காத்துடன்மழைகள் வந்தெதிர்த்தால்
முட்டியேநெருங்கி பொழிந்திடமழைகள்
  முருகையாவென்றுநினைக்க
யோட்டியோதத்தை முடுகினில்வந்து
  உதவிசெய்ய மழையைநீமாறு
கூட்டியேதுணைவா அரனருள்புதல்வா
  குமரனே சுப்ரமண்யனே. 19

பகைவரைவிலக்கல்.

வழிதப்பித்தனியே வருகின்றநேரம்
வங்குலப்பகைவர் வந்தெதிர்த்தால்
குளறியேமனதில் இருதயங்கலங்கிக்
  குமரரே யென்றுனையழைக்கப்
பழிபடப்பகைவர் சிதறிடநீயும்
  பருமயிலேறிவருவாய்
வெளிபடைப்பகைவர் மிரண்டிடவாளால்
  வெட்டுநீ சுப்ரமண்யனே. 20

பீடைவிலக்கல்.

வேங்கையின்வடிவாய் விபூதியின்வொளியாய்
  வெண்மலர் பூவினிச்சுடராய்த்
தாங்கியேமலையை யெடுத்திடும்இடும்பன்
  தயாபரனாகிய துணையாய்
தங்கியேபீடை நிமிஷத்தில்விலக்கி
  நீரிடும் நெத்தியில்தினமும்
காய்கயன்கழுகு மலையினிவாழும்
  கர்த்தனே சுப்ரமண்யனே. 21

சர்ப்பம்விலக்கல்.

சீறியேசர்ப்பம் சீறிவயயென்னை
  மனத்தினாலக் கடித்திடநினைந்தால்
பாரியமயிலூர்ப் பாம்பது யென்னைப்
  பாதகம் நினைந்திடக்கந்தா
சீறியேகடித்தால் விஷமதையிறக்கி
  யிரண்டுகையா லெனையெடுத்துத்
தேரிடமனத்தைப் தைரியப்படுத்தும்
  தேசிகா சுப்ரமண்யனே. 22

ஜடாமுனியைவிலக்கல.

காளியுங்கூளி ஜடமுனிராட்சதைக்
  காட்டிலேயெதிர்த்தெனையிறட்ட
காளியுங்கூளி கலங்கிடமனது
  கதரிநான் மாலையைப்பாட

நாழிகை தூரம் மயிலினிலேறி
நாயகா திடத்துடன்வருவாய்
வாழிசைகுகனே வழித்துணையாக
வந்திடுஞ்சுப்ரமண்யனே. 23

பூசைபுரிந்தயிடம்.

நிச்சயமாக நினைந்துனைப்பூசை
நிறஞ்சனம் செய்திடுமவர்க்கு
பட்சிகளறிந்து கருதுவதையெடுத்து
பாதகஞ்செய்திட நினைந்தால்
மிச்சம்விடாமல அவர்களைசிதற
வேலினல் பிளந்தெரிகந்தா
நிட்சணரூபா ரட்சகாவாவா
நிதித்ரும் சுப்ரமண்யனே. 24

சுவாமிவந்தவிடம்.

மெய்யெனவுனையே நம்பினபேர்க்கு
மெய்யென வரந்தாருமையா
பொய்யெனவுனையே இகட்சிசெய்தோர்க்கு
பெரும்பிணி அதிகமாய்கொடிப்பாய்
ஐயனேமெய்யா யுனைவிடயெனக்கு
ஆதபவெங்கையுங் காணேன்
மையனேமெய்யா ஐயசேவாவா
சிவசிவ சுப்ரமண்யனே. 25

காய்ச்சல் விலக்கல்.

அடித்திடுங்காய்ச்சல் உபத்திரத்துடனே
அடிமைவந்ததர்சொன்னல்
படித்துநானுனது மாலையைத்தினமும்
பாலனுனவிருத்தியுங்கொடுக்க
கடித்திடத்துடைத்தவகையதுபோலே
கர்த்தனே பறந்திடக்கண்பார்
படித்திடத்தினமும் வலப்புறம்வருவாய்
பழனியில்சுப்ரமண்யனே. 26

பிழைபொருப்பது.

அறியாமல் செய்திடும்பிழையை
அண்டவாபொருப்பதுனசெயலே
தெரிந்துநின்மனமல் குற்றமாய்வைத்து
தெண்டனைசெய்திடவேண்டும்
பரிந்துநீயுனது மைந்தனென்றெண்ணிப்
. பவுசுபாககியங்களைக் கொடுப்பாய்
கரிமால்முருகா அரனிடபுதல்வா
காங்கயா சுப்ரமண்யனே. 27

தற்சொரூபமானவிடம்.

வாருமென்றுனையே மனத்தினில்நினைந்தால்
வந்துநில்அடியேன் முனகந்தா
தாருமென்றுனையே கேட்டநல்லவரமும்
தாட்சியில் லாமகொடும்பாய்

காருமென் றுனையே மனத்தினில்நினைத்தால்
கர்த்தனேயனுதினமுங் காப்பாய்
பாருமென் றுனையே அனுதினமுநினைத்தால்
பராபரமண்யனே. 28

காலைமாலையு மனதில்நுனையே
கந்தாவென் றுயானினைக்க
வாலையும்வயதாம் வாழிடம்வருவாய்
வள்ளிதெய்வானை மணவாளா
காலையுமாலையு மனுதினம்வந்து
காட்சியுமோட்சமுங் கொடுப்பாய்
சோலைபங்கிளிபோல் வாய்திரக்தோர்மொழி
சொல்லையாசுப்ரமண்யனே. 29

அர்ச்சனைபுரிந்தவிடம்.

அனுதினமுனையே மனத்தினில்நினைந்து
அர்ச்சனைசெய்து நானிருக்க
இனியென்னையுனது அருமுகதெரிசனை
யீக்திடாதிருப்பதேனையா
புனிதமாயுனது அடியேன்செய்தபிழை
பொருத்தென்முன் வருவாய்கந்தா
பனிகளுள்ளோர்க்குத் தெரிசனைகாட்டும்
பரமனே சுப்ரமண்யனே, 30

பாக்கியந்தவிடம்

காவிவஸ்திரமும் கருத்தினிலுத்ராட்சம்
கையினில்சிவமணியெடுத்து
மேவியேயுனது சடாட்சரஞ்சேவித்து
வெற்றிவேல் கைதனிலெடுத்து
கூவியேயயிலி லேறியேவந்து
கொடுத்திடு மதிகபாக்கியமும்
நீதியேயெனையரு ளுதவியேகையால்
நெத்தியில்தீரிடும் சுப்ரமண்யனே. 31

மந்திரவுபதேசப்பொருள்.

திரமுடன்கிரியுங்கிரியுடைத்தாக
திரள்புய அச்சரத்தொளிவாய்
சரவணபவனே சயரொளிபவனே
சடாட்சரக் கோர்வைமுதலாய்
திரமுடன்வருவாய் திரியுரிபவனே
திகரொளிபவ குருநாதா
அரகரபவனே பகரொளியானே
ஐயனே சுப்ரமண்யனே. 32

சுப்ரமண்யர்மாலை முற்றிற்று.